# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2198/58 - 2020 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2020.10.23

*2198/58 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு உத்தேச உடுகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர் உள்ளிழுப்பினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையைச் சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*'லக்திய மெதுர',*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 15.*
*தொடர்பு இல. : 5-2/GL/25*

**அட்டவணை**

*காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலகப் பிரிவில், 219சீ, உடுகம வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கெடகொட கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் - நீதிமன்ற ஆணையாளர் திரு. எம். என். ஜே. ஏ. பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள 367A ஆம் இலக்கமுடைய திட்டப்படத்தில் துண்டு இலக்கம் 4 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள வக்கலம் ஓவிட என்றழைக்கப்படுகின்ற 33.12 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : துண்டு இலக்கம் 03 (தொங்கு பாலம்) மற்றும் துண்டு இலக்கம் 05 இற்குரிய காணி ;*
*கிழக்கு : துண்டு இலக்கம் 03 (தொங்கு பாலம்) மற்றும் துண்டு இலக்கம் 05 மற்றும் துண்டிலக்கம் 06 (வீதி) ;*
*தெற்கு : துண்டு இலக்கம் 09 (வீதி) மற்றும் துண்டு இலக்கம் 05 ;*
*மேற்கு : துண்டு இலக்கம் 09 (வீதி).*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : 01. திரு. பீ. பி. விஜேசுந்தர,*
*புதிய வீதி,*
*கெடகொட.*

*11-148*